# பொருளடக்கம்

உயர்தர பாடசாலைக்கு நல்வரவு

ஈடுபடுங்கள்

தொடர்பில் இருங்கள்

கல்வி ஆண்டு நாள்காட்டி

பாடசாலை வளவுக்கு வெளியே செல்லல்

சமூகமளிப்பது முக்கியமானது

தகமைக்கேற்ற, உள்ளடக்கும் கல்வி (Equity & inclusive)

கற்பதற்குப் பாதுகாப்பான இடங்கள்

மாணவர்களின் நல்வாழ்வு

அளவீடு மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல்

மாணவர்களுக்கான சேவைகள்

வழித்தடத்(Pathway) திட்டங்கள்

ஆதாரவளங்கள்

உங்களுடைய கேள்விகளுக்கான பதில்களைப் பெறல்

# ஆயத்தமா? தயாரா? உயர்தரப் பாடசாலைக்குச் செல்! பெற்றோருக்கான வழிகாட்டி

## உயர்தரப் பாடசாலைக்கு நல்வரவு

உங்களுடைய பதின்மவயதுப் பிள்ளைக்கு மிகவும் பரபரப்பாகவும் முக்கியமாகவும் இருக்கக்கூடிய பாடசாலைக் காலங்களுக்காகத் தயாராகுங்கள். எதைக் கற்பது மற்றும் எந்தத் தொழிலுக்கான பாதையைத் தேர்ந்தெடுப்பது போன்ற தெரிவுகளை பதின்மவயதினர் முதன் முதலாக இங்கு முடிவெடுக்க வேண்டியிருக்கும்.

உயர்தரப் பாடசாலையில் நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய மேலும் சில விடயங்கள்:

- தேர்ந்தெடுப்பதற்கான அதிகளவு கற்கை நெறிகள் மற்றும் திட்டங்கள்
- தொழிலுக்குரிய பாதைக்கான ஆய்வுக்கு அதிக முக்கியத்துவம்
- புதிய ஆசிரியர்கள் மற்றும் வகுப்புத் தோழர்கள்
- பாடநெறிக்கு வெளியிலான மற்றும் சமூகரீதியான மேலதிக வாய்ப்புகள்
- அதிகரித்த சுதந்திரம் மற்றும் பொறுப்பு அதிகரிப்பு
- ஒழுங்கமைப்பு மற்றும் நேர மேலாண்மைக்கான அதிக தேவை

உங்களுடைய பதின்மவயதினர் எந்தப் பாதையைத் தெரிவுசெய்தாலும், அந்தச் சவால்களைச் சந்திப்பதற்கும், படிப்பை முடிக்கும் போது, உங்களுடைய பதின்மவயதினருக்குக் கிடைக்கவிருக்கும் பல சந்தர்ப்பங்களை ஆர்வமாக ஏற்றுக்கொள்வதற்கும் உங்களுடைய முழுக்குடும்பமும் தயாராக இருக்கின்றது என்பதை நாங்கள் உறுதிப்படுத்த விரும்புகின்றோம்.

உங்களுடைய பதின்மவயதினர் வெற்றிகரமாக இருப்பதற்கு உதவிசெய்ய, நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை பற்றியதொரு சுருக்கமான தகவலை இந்த வழிகாட்டி உங்களுக்கு வழங்கும்.

## ஈடுபடுங்கள்

பெற்றோரின் ஈடுபாடு, மாணவரின் வெற்றியில் நேர்முகமான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஆகவே, உங்களுடைய பதின்மவயதினரின் கல்வியில் நீங்கள் ஏன் சம்பந்தப்படக்கூடாது?

பாடசாலையும் பெற்றோரும் சேர்ந்து தொழிற்படும் போது, மாணவர்கள் மேலும் உந்தப்படுவதுடன், அவர்களுடைய பாடசாலை அனுபவங்களில் அதிகம் சம்பந்தப்படுகின்றார்கள். பின்வருவனவற்றுக்கு, www.peelschools.org என்ற வலைத்தளத்தில், *பெற்றோர் பகுதியைப்(Parents section*) பாருங்கள்:

- பாடசாலைகளுடன் சம்பந்தப்படல் மற்றும் பாடசாலைகளில் தன்னார்வத் தொண்டாற்றல் எப்படி எனக் கண்டறிய
- உதவிக்குறிப்புத் தாள்கள் மற்றும் பெற்றோர் ஆதாரவளங்களைத் தரவிறக்கம் செய்ய
- கல்விச்சபையின் பெற்றோர் ஈடுபாட்டுக் குழு(Parent Involvement Committee (PIC)) பற்றி அறிவதற்கு
- பாடசாலைச் சபைகள் (School Councils) பற்றி அறிவதற்கு

### பெற்றோர் ஈடுபாட்டுக் குழு(Parent Involvement Committee (PIC)

PIC ன் நோக்கம்:

- அர்த்தமுள்ள பெற்றோர் ஈடுபாட்டை, பாடசாலைகளுக்கு உள்ளும் மற்றும் பீல் கல்விச்சபை முழுவதும் ஆதரவளித்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல்
- பிராந்திய மட்டத்தில் மேலதிக பெற்றோர்களைச் சம்பந்தப்படுத்துவதற்காக, பாடசாலைச் சபைகள்(School Councils), ஏனைய பெற்றோர்கள் மற்றும் பங்குதாரர்கள் திட்டமிடும் போதும், உத்திகளைச் செயல்படுத்தும் போதும், அவர்களின் ஆலோசனை மற்றும் கருத்துக்களைப் பெறல்
- கல்விச் சபையுடன் ஒன்றிணைந்து தொழிற்படல்
- சம்பந்தப்படுவது மிகவும் சவாலாக இருக்கும் பெற்றோர் உள்ளடங்கலாக, பெற்றோரைத் தொடர்புகொள்வதற்கும் அவர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்குமான உத்திகளை உருவாக்கல்
- மாணவர்களின் வெற்றிக்கு உதவிசெய்தல்

PIC பற்றி மேலும் அறிவதற்கு, பார்வையிடுங்கள்: www.peelschools.org/PIC.

## தொடர்பில் இருங்கள் — உங்களுடைய பாடசாலை வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்

தொடர்பில் இருப்பதற்கும், பாடசாலைச் செய்திகள் பற்றி அன்றன்றே அறிவதற்கும் பாடசாலை வலைத்தளம் நல்லதொரு வழியாகும். பாடசாலை மற்றும் கல்விச் சபை வலைத்தளங்கள் மின்னியல்ரீதியான சந்தாச் சேவையை வழங்குகின்றன.

பாடசாலை மற்றும் பீல் கல்விச்சபைச் செய்திகளைப் பெறுவதற்கு, உங்களுடைய மின்னஞ்சல் முகவரியை உள்ளிடுவதன் மூலம் நீங்கள் பதிவு செய்யலாம். நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் விடயங்களைத் தெரிவுசெய்யுங்கள், கேட்கப்படும் தகவல்களை நிரப்புங்கள், ஒரு ஒழுங்கான முறையில் நீங்கள் மின்னஞ்சல்களைப் பெற்றுக்கொள்வீர்கள். கல்விச்சபையின் முகப்புப் பக்கத்தில் *சந்தா(Subscribe)* என்ற விசைப் பொறியைத் தேடுங்கள், அத்துடன் இற்றைப்படுத்தல்களைப் பெறுவதற்குப் பதிவுசெய்வதற்காக, உங்களுடைய பாடசாலை வலைத்தளத்தின் இடது கைப் பக்கத்திலுள்ள *சந்தா(Subscribe)* என்ற இணைப்பை அழுத்துங்கள்.

பீல் கல்விச்சபையின் வலைத்தளம் —www.peelschools.org— பாடசாலை அமைப்பு முறை பற்றிய தகவல்களுக்கும் சிறந்ததொரு ஆதாரமாக உள்ளது. உங்களுடைய பதின்மவயதினரின் வெற்றியை ஊக்குவிக்கும் குறிப்புக்களுக்கு *பெற்றோர் பகுதியைப்(Parents section)* பார்வையிடுங்கள்.

உதவிக்குறிப்பு: உங்களுடைய சரியான தொடர்ப்புத் தகவல்கள் பாடசாலையிடம் இருப்பதை உறுதிப்படுத்துங்கள். தொலைபேசி, குறும்செய்தி மற்றும் மின்னஞ்சல் செய்திகள், synervoice அமைப்புக்கூடாக அனுப்பப்படுகின்றன.

**மாணவர் கையேடு**

ஒவ்வொரு பாடசாலை வருடத்தின் ஆரம்பத்திலும் அச்சில் அல்லது அந்தப் பாடசாலை வலைத்தளத்தில் கிடைக்கும் மாணவர்களின் கையேட்டைப் பரிசீலிக்க வேண்டுமென உயர்தர வகுப்பு மாணவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். மாணவர்களின் கையேடு, பாடசாலையின் குறிக்கோள், தொலைநோக்கு, பெறுமானங்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்குகின்றது; பாடசாலையின் நன்நடத்தைக் கோட்பாட்டை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது; மாணவர்களின் கல்விரீதியான வெற்றிகளில் மாணவர்கள், பெற்றோர் மற்றும் பாடசாலைப் பணியாளர்களின் பங்கைக் கோடிட்டுக்காட்டுகின்றது; அத்துடன் கல்விகற்றல் செய்முறையினதும் எதிர்பார்ப்புகளினதும் மதிப்பீட்டுக் கொள்கைகளை விபரிக்கின்றது. மாணவர்களின் கையேட்டை பெற்றோரும் மாணவர்களும் சேர்ந்து ஒன்றாகப் பரிசீலிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கல்வி ஆண்டு நாள்காட்டி**

கல்வி ஆண்டு நாள்காட்டி *www.peelschools.org/calendar* ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது அத்துடன் அது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- முதல் நாள் மற்றும் இறுதி நாள் வகுப்புகள்
- லீவு நாட்கள் உள்ளடங்கலாக, புனித நாட்கள் மற்றும் விடுமுறை நாட்கள்
- தொழில்முறைச் செயற்பாட்டுக்கான நாட்கள்(Professional Activity days)
- மொத்த நாட்கள்(turn-around days)
- தேர்வு நாட்கள்(exam days)
- ஆண்டு இறுதி அறிக்கையிடுதல் நாட்கள்

சிலவேளைகளில் பாடசாலை வலைத்தளங்களில் பாடசாலை ரீதியிலான செயற்பாடுகள் பிரசுரிக்கப்படுகின்றன. உங்களுடைய பாடசாலை வலைத்தளங்களைப் பார்வையிடுங்கள் அத்துடன் எதிர்காலச் செயற்பாடுகள் பற்றிய அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காகச் சந்தாகாரர் ஆகுங்கள்.

## பெற்றோர்தொடர்பு(ParentConnect)

அனேகமான பாடசாலைகள், பெற்றோருக்கு நுழைவுக்கான அனுமதி(login) ஒன்றைக் கொடுக்கின்றன, அதனால் அவர்களுடைய பதின்மவயதினரின் சமூகமளிப்பு, கடன் சரித்திரம் மற்றும் டிப்ளோமாவின் நிலை போன்றவற்றுடன் கற்கை நெறித் தெரிவு மற்றும் ஏனைய தகவல்களை பெற்றோர்கள் அணுக முடிகின்றது. நீங்கள் எப்படிப் பதிவுசெய்யலாம் என அறிவதற்கு, *பெற்றோர்தொடர்பு* (*ParentConnect*) *விசை அழுத்தியைத் (button)* (பாடசாலை வலைத்தளத்தின் வலது பக்கத்தில்) தேடுங்கள். தகவல்களுக்கு உங்களுடைய பதின்மவயதினரின் பாடசாலையையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

### பாடசாலை வளவுக்கு வெளியே செல்லுதல்

உயர்தரப் பாடசாலை மாணவர்கள், அவர்களுடைய மதிய உணவு வேளை மற்றும்/அல்லது ஓய்வு நேரங்களில் (study periods) பாடசாலை வளவை விட்டு வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அனேகமான மாணவர்கள் வீட்டுக்குச் செல்வதை அல்லது அருகிலுள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தகங்களுக்குச் செல்வதைத் தெரிவுசெய்கின்றார்கள்.

பாடசாலை வளவுக்கு வெளியே செல்வதற்கு மாணவர்களுக்கு விசேட அனுமதி தேவையில்லை. உயர்தர பாடசாலையில் ஒவ்வொரு பாடத்தின் போதும் வருகை பதியப்படுவதால், மாணவர்கள், தங்களுடைய மதிய உணவு வேளையின் பின்னர் திரும்பி வராமல் விடுகின்றார்களா என்பதைத் தீர்மானிப்பதற்கு, சமூகமளிப்பு மாதிரிகளை பாடசாலைகள் கண்காணிக்க முடியும். தேவைக்கேற்ப பணியாளர்கள் அதில் தலையீடு செய்வார்கள், அது வீட்டிற்கான அழைப்பையும் உள்ளடக்கலாம்.

### சமூகமளித்தல் முக்கியம்

உங்களுடைய பதின்மவயதினரின் வெற்றியைப் பல விடயங்கள் பாதிக்கின்றன. அவற்றில் மிகவும் முக்கியமான காரணிகளில் ஒன்றாக, ஒழுங்கான, உரிய நேரத்துக்கான வருகை உள்ளது. உங்களுடைய பதின்மவயதினர் பாடசாலையிலிருந்து அதிகளவு பயனைப் பெற

வேண்டுமானால், உரிய நேரத்துக்கு வகுப்புக்கு வருவதும், சமூகமளிக்காமல் விடுவதைத் தவிர்ப்பதும் மிகவும் அவசியமாகும்.

*சமூகமளியாமையை அறிவித்தல்*

உங்களுடைய பதின்மவயதினர் சமூகமளிக்க மாட்டார் ஆயின், பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்பாக, உங்களால் முடியுமானளவு விரைவில் பாடசாலையை அழையுங்கள். பதின்மவயதினரின் பகுதி நாளுக்கான அல்லது முழு நாளுக்கான சமூகமளியாமை அறிவிக்கப்படாவிட்டால், அந்த நாளன்று அவர்களுடைய பெற்றோர்களுக்கு அழைப்பு வரும்.

*தாமதமாக வருதல்*

பாடசாலைக்கு அல்லது வகுப்புக்கு, மாணவர் ஒருவர் தாமதமாக வருவதாயின், செய்யப்பட வேண்டியவை எவை என்பது பற்றிய அறிவுறுத்தல்களுக்கு, பாடசாலையின் தாமதமாக வருதல் கொள்கையை, பெற்றோர்களும் மாணவர்களும் பரிசீலிக்க வேண்டும்.

*விடுமுறைத் திட்டமிடல்*

தயவுசெய்து, பாடசாலையின் அட்டவணைப்படுத்தப்பட்ட விடுமுறைகளின் போது இருக்கக்கூடியதாக குடும்பச் சுற்றுலாக்களைத் திட்டமிடுங்கள். ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட திறன்கள் மற்றும் கோட்பாடுகளிலிருந்து கட்டப்படும் கற்றல் திரள் விளைவுக்குரியது. வகுப்புக் கோட்பாடுகளைத் திரும்பவும் கற்பதையும் அவர்களுடைய சக மாணவர்களுடன் மீள இணைவதையும், நீண்ட காலத்திற்கு வகுப்புக்களைத் தவறவிடல் சவாலாக்கக் கூடும்.

*நீடிக்கப்பட்ட சமூகமளியாமை*

மாணவர் ஒருவர் மூன்று நாட்களுக்கு மேலாகவும் 15 நாட்களுக்குக் குறைவாகவும் பாடசாலைக்குச் சமூகமளிக்காமல் இருக்க வேண்டியிருந்தால், சமூகமளிக்காமல் இருப்பதற்கு முன்பாக, பெற்றோர் ஒருவர் கையொப்பமிட்ட குறிப்பொன்று அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமூகமளிக்காமல் இருக்கப் போகும் திகதிகள், மாணவரின்

பெயர், அந்த மாணவர் திரும்பி வரவிருக்கும் திகதி என்பவை அந்தக் குறிப்பில் இருக்க வேண்டும்.

மாணவர் ஒருவர் 15 நாட்களுக்கு  மேலாக பாடசாலைக்குச் சமூகமளிக்காமல் இருக்க வேண்டியிருந்தால், பெற்றோர்/பாதுகாவலர் ஒருவர் கையொப்பமிட்ட குறிப்பொன்று அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமூகமளியாமை ஆரம்பிக்கும் மற்றும் முடிவடையும் திகதிகளுடன், சமூகமளிக்காமைக்கான காரணமும் அந்தக் குறிப்பில் இருக்க வேண்டும்.  குறிப்பொன்று சமர்ப்பிக்கப்படாவிட்டால், பாடசாலை வரவேட்டிலிருந்து அந்த மாணவர் நீக்கப்படுவார்.

## தகமைக்கேற்றதும் உள்ளடக்குவதுமான கல்வி

*தகமைக்கேற்றதும் உள்ளடக்குவதுமான கல்விக் கொள்கை (Equity and Inclusive Education) #54,* கற்றலுக்கும் தொழிற்படுவதற்கும் உகந்த பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சூழல்களை அனைவருக்கும் வழங்குவதற்கும் பராமரிப்பதற்குமான பீல் கல்விச்சபையின் உறுதிப்பாட்டினைப் பிரதிபலிக்கின்றது. கல்விச்சபையின் திட்டங்கள், வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகள், பாடத்திட்டம் மற்றும் மதிப்பீடு முதல் மதரீதியான இணக்கம் வரை, வரவேற்கும் பாடசாலைச் சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதுடன் பாரபட்சம் மற்றும் தொந்தரவைத் தடுத்தல் போன்ற அனைத்திலும் இந்தக் கொள்கை தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.,

இயல்பான பண்புகள்(Character Attributes)

- கரிசனை
- ஒத்துழைப்பு
- நேர்மை
- உள்ளடக்கல்
- மரியாதை
- பொறுப்பு

***மதரீதியான இணக்கம் (Religious accommodation)***

பீல் கல்விச்சபையின் மதரீதியான இணக்கச் செய்முறை, மனித உரிமைகள், அணுகக்கூடிய தன்மை மற்றும் தகமைக்கேற்ற எமது உறுதிப்பாடு என்பன பற்றி அறிவதற்கு, பார்வையிடுங்கள்: www.peelschools.org/aboutus/equity.

## கற்பதற்குப் பாதுகாப்பான இடங்கள்

உங்களுடைய பதின்மவயதினரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்க்கையைப் போல மிகவும் முக்கியமான விடயம் வேறு எதுவும் பெற்றோராகிய உங்களுக்கு இருக்க மாட்டாது. எங்களினது முன்னுரிமையும் அதுவாகவே இருக்கின்றது. எங்களுடைய மாணவர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஆரோக்கியமான, ஆதாரவானதொரு சூழலை, கற்றல் மற்றும் தொழிற்பாட்டுக்காக வழங்குவதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

தொழிற்பாட்டுக்கும் கற்றலுக்குமான பாதுகாப்பானதொரு சூழலை, பீல் பாடசாலைகள் பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்குகின்றன. தீயிலிருந்து தப்பும் பயிற்சிகள்(fire drills), வெளியேறல் திட்டங்கள், புதிய பணியாளர்கள் மற்றும் தொண்டர்களுக்கான குற்றவியல் பதிவுகளைப் பரீட்சித்தல் போன்ற வழமையான நடைமுறைகள் உள்ளடங்கலாக பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பல நடைமுறைகள் பீல் பாடசாலைகளிடம் உள்ளன.

***பாதுகாப்பில் கவனம்செலுத்தல்***

பீல் கல்விச்சபையின் பாதுகாப்பான பாடசாலைகள் கொள்கை *கல்விச் சட்டம் மற்றும் ஒன்ராறியோ நன்நடத்தை* மற்றும் *மனித உரிமைக் கோட்பாடுகளை(Education Act* & *Ontario Code of Conduct* and the *Human Rights Code*) அடிப்படையாகக் கொண்டது. இந்தக் கொள்கையைப் பாடசாலையில் அல்லது www.peelschools.orgல் பெற்றுக்கொள்ளலாம் — *பாதுகாப்பான பாடசாலைகள்(Safe Schools)* search barல் — *கொள்கை #48*ஐத் தேடுங்கள்.

### *நன்நடத்தைக் கோட்பாடு (Code of Conduct)*

ஒவ்வொரு பாடசாலைக்கும் அதற்குரிய நன்நடத்தைக் கோட்பாடு உள்ளது, அது மாகாண மற்றும் பீல் கல்விச்சபை கொள்கைகளின் அடிப்படையிலானது, அத்துடன் மாணவர் கையேட்டில் அது உள்ளடக்கப்பட்டுள்ளது. மாணவர்கள், பெற்றோர்/பாதுகாவலர்,

தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் பாடசாலைப் பணியாளர்கள் உள்ளடங்கலாக பாடசாலைச் சமூகத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும், அவர்கள் பாடசாலை வளவுக்குள், பேரூந்தில், பாடசாலையால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வில் அல்லது செயற்பாடுகளில் அல்லது பாடசாலைச் சூழலைப் பாதிக்கக்கூடிய வேறு ஏதாவது சூழலில், எங்கிருந்தாலும் அது பொருந்தும்.

தகுந்த முறையில் நடக்க வேண்டிய, தங்களுடைய செயல்களுக்குத் தாங்கள் பொறுப்பேற்க வேண்டிய மற்றும் நன்நடத்தைக் கோட்பாட்டுக்கு மதிப்பும் கௌரவமும் கொடுக்க வேண்டிய பொறுப்பு பாடசாலைச் சமூகத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் உள்ளது. .

### *அடவாடித்தனத்தைத் (Bullying) தடுத்தலும் தலையீடு செய்தலும்*

அடாவடித்தனத்தைத் தடுக்கவும், அது நடக்கும் போது அதில் தலையிடுவதற்குமான பல திட்டங்களையும் முன்னெடுப்புகளையும்(initiatives) பீல் கல்விச்சபை முழுவதும் உள்ள பாடசாலைகள் பயன்படுத்தக்கூடும். பாடசாலையின் வெற்றித் திட்டத்தின் பகுதியாக, அடாவடித்தனத்தைத் தடுக்கும் மற்றும் தலையிடும் திட்டங்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் இயங்கும் கற்றல் மற்றும் தொழிற்படல் குழுவினரால் உருவாக்கப்படுகின்றன.

அடாவடித்தனப் பிரச்சினையைப் பாடசாலைகள் சிறியதொரு விடயமாகக் கருதுவதில்லை. அடாவடித்தனம் நடந்ததாக ஒரு முறை அறிவிக்கப்பட்டால், கல்விச்சபையின் பாதுகாப்பான பாடசாலைக் கொள்கையும் பாடசாலையின் நன்நடத்தைக் கோட்பாடும் சம்பந்தப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் (அல்லது தனிநபர்களுக்கு) பொருத்தமான ஒழுங்குமுறை ஆதரவுகளுக்கும் பின்விளைவுகளுக்கும் வழிகாட்டுகின்றன. இது பற்றிய கரிசனைகள் உள்ள பெற்றோரை, அந்தப் பாடசாலையுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளுமாறு நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

## மாணவர் நல்வாழ்வு

அனைவரினதும் கற்றலுக்கும் தொழிற்பாட்டுக்கும் உகந்த பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சூழல்களை வழங்குவதற்கும் பராமரிப்பதற்கும் பீல் கல்விச்சபையில் நாங்கள் மிகவும் முயற்சி செய்கின்றோம். உறுதி, அர்ப்பணிப்பு மற்றும் கரிசனையுள்ள

மனிதர்களாகிய, எங்களுடைய பரந்துபட்ட பணியாளர்கள், அனைத்து மாணவர்களுக்கும் ஆதரவு வழங்குவதற்கு நன்கு தேர்ச்சிபெற்றவர்களாக உள்ளனர்.

சமாளிக்க முடியாத நிலையில் அல்லது தன்னம்பிக்கை அற்ற நிலையில் தாங்கள் இருப்பதாக உணரும் மாணவர்கள், தங்களுக்கான சுய பரிந்துரைப்புச் செய்வதை – பாடசாலையிலுள்ள தாங்கள் நம்பும் பெரியவர்களிடம் உதவி கேட்பதை—நாங்கள் ஊக்குவிக்கின்றோம். பணியாளர்கள், மாணவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்பதற்குத் தயாராக இருப்பதுடன், தகுந்த நேரத்தில் பொருத்தமான ஆதரவு கொடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்கும் உதவுவார்கள்.

வழிகாட்டல் ஆலோசகர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் யாவரும் உதவுவதற்காக இருக்கின்றனர். பாடசாலை சார்ந்த உளவியலாளர்கள், சமூக சேவகர்கள் மற்றும் மாணவர்களின் வெற்றிக்கான ஆசிரியர்களும், சிரமப்படும் அல்லது அரும்பாடுபடும் மாணவர்களுக்கு ஆதரவு வழங்குவதற்காக இருக்கின்றார்கள்.

உங்களுடைய பதின்மவயதினரின் நல்வாழ்வு பற்றி நீங்கள் எவருடனாவது கதைக்க வேண்டுமானால், தயவுசெய்து உங்களுடைய வழிகாட்டல் ஆலோசகர் ஒருவரைத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது உப அதிபர்களில் ஒருவருடன் கதையுங்கள்.

## அளவீடு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல்

**"மாணவரின் கற்றலை மேம்படுத்துவதே, அளவீடு மற்றும் மதிப்பீட்டுக்கான முக்கிய காரணமாகும்."**

அளவீடு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடலுக்கான நடைமுறைகள், கல்வி அமைச்சு மற்றும் கல்விச்சபைக் கொள்கைகளால் நெறிப்படுத்தப்படுகின்றன. ஒன்ராறியோ பாடசாலைகளிலுள்ள, 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையான மாணவர்களின் அளவீடு, மதிப்பீடு மற்றும் அடைவுகளின் அறிக்கையிடலுக்கு வழிகாட்டும், *Growing Success*, எனப்படும் கொள்கை ஆவணம் ஒன்றை ஏப்ரல் 2010ல், அமைச்சு வெளியிட்டது. அமைச்சின் கொள்கையை இற்றைப்படுத்தல், தெளிவுபடுத்தல், ஒன்றிணைத்தல் மற்றும் மாகாணம் முழுவதும் நியாயம், வெளிப்படைத்தன்மை, தகமைக்கேற்ற நிலை மற்றும் நிலையானதன்மையை அடைதலை *Growing Success* நோக்கமாகக் கொண்டுள்ளது.

*Growing Success* பற்றி மேலதிக தகவல்களை அறிவதற்கு, பார்வையிடுங்கள்: www.edu.gov.on.ca/eng/parents/reportcard.html.

### *மாணவர்கள் எப்படி அளவிடப்படுகின்றனர் (assessed)?*

பாடம் அல்லது கற்கை நெறி ஒன்றின், பாடத்திட்ட எதிர்பார்ப்புக்களை மாணவர் ஒருவர் பெற்றுக்கொள்கின்றார் என்பதைத் துல்லியமாகப் பிரதிபலிக்கக்கூடிய தகவல்களை வேறுபட்ட ஆதாரங்களிலிருந்து சேகரிக்கும் செய்முறை அளவீடு எனப்படும். மாணவர்களுக்கான பின்னூட்டல்களைக் கொடுப்பதற்காக, அவதானிப்புக்கள், உரையாடல்கள் மற்றும் அவர்கள் செய்த வேலைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களை ஆசிரியர்கள் பயன்படுத்துவார்கள். கற்கும் போது அளவீடு, கற்றலுக்கான அளவீடு, கற்றலின் அளவீடு என மூன்று வகையான அளவீடுகள் வகுப்பறையில் நிகழ்கின்றன.

### *குழு வேலை*

ஒவ்வொரு கற்கை நெறியினதும் எதிர்பார்ப்புக்களுக்கான, மிகச் சமீபத்திய மற்றும் மிகவும் நிலையான அவர்களின் நிரூபிப்புக்களின் முக்கியத்துவத்தை மையமாக வைத்து, தவணை முழுவதுமான கற்கைக்கான அவர்களின் நிரூபிப்புகளினால் மாணவரின் இறுதித் தரம் தீர்மானிக்கப்படுகின்றது. விளக்கக்காட்சிகள், கலந்தாய்வுகள், வலைத்தளங்கள், பரீட்சைகள், மற்றும்/அல்லது செயல்திறன் பணிகளால் கற்றல் நிரூபிக்கப்படலாம்.

தவணைக் காலத்தின்போது, மாணவர்களால் பூரணப்படுத்தப்படும் சில ஒப்படைகள் ஆரம்ப (formative) அளவீடுகளாக (கற்றலும் கற்றலுக்கான அளவீடாக) அல்லது வெற்றி அளவுகோல்களை மாணவர்கள் எவ்வளவு நெருக்கமாக சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் அவர்கள் முன்னேற என்ன செய்ய வேண்டும் என்பதையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தும் நோக்கங்களைப் பூர்த்திசெய்யும் அளவீடுகளாக இருக்கலாம். ஏனைய ஒப்படைகள் முழுமையானவையாக (summative) (கற்றலின் அளவீடாக) — ஆசிரியர் மாணவரின் கற்றலை மதிப்பிட்டு தரம் அல்லது நிலை ஒன்றை வழங்குவார்.

## *கற்றல் திறன்கள் மற்றும் வேலைப் பழக்கங்கள்*

மிகவும் திறம்படக் கற்றுக் கொள்வது எப்படி என அறிவதற்கு, சுயாதீனமாகக் கற்கும் அவர்களின் திறனை அபிவிருத்தி செய்வதற்கு மற்றும் தங்களுடைய கற்றலுக்குத் தாமே பொறுப்பேற்பதற்கு, கற்றல் திறன்கள் மற்றும் வேலைப் பழக்கங்கள் மாணவர்களுக்கு உதவுகின்றன. மாணவர்களின் கற்கை நெறி எதிர்பார்ப்புகளுக்கான அடைவுகளிலிருந்து வேறாக அவை மதிப்பீடு செய்யப்படுகின்றன.

## *என்னுடைய பதின்மவயதினர் எப்படி மதிப்பீடு செய்யப்படுவார் (evaluated)?*

உறுதிசெய்யப்பட்ட வரையறைகளின் அடிப்படையில் மாணவரின் கற்றல் தரத்தை ஆராயும் மற்றும் தரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த பெறுமதி ஒன்றை ஒதுக்கும் ஒரு செயல்முறையாக மதிப்பிடுதல் உள்ளது. வகுப்பு/பாடம்/கற்கை நெறி முழுவதும், பெரும்பாலும் கற்றல் காலமொன்றின் முடிவில், மூலோபாய நேரங்களில் மாணவர் அடைவுகளுக்கான தரவுகளை வழங்கும் அளவீடுகளை, இது அடிப்படையாக கொண்டது

அவதானிப்பு, உரையாடல்கள் மற்றும் மாணவர் ஆக்கங்களிலிருந்து (உ+ம். கலந்தாய்வுகள், நிரூபித்தல்கள், விசாரணைகள், பரீட்சைகள், ஆய்வுகூடங்கள் மற்றும் ஒப்படைகள்) குறிப்பிட்ட காலத்துக்கூடாக மாணவர் கற்றலுக்கான ஆதாரங்களை ஆசிரியர்கள் சேகரிக்கின்றார்கள்; மாணவர்களின் தரங்களைத் தீர்மானிப்பதற்கு, தொழில்முறை நியாயங்களுடன் இவற்றையும் பயன்படுத்துகிறார்கள். தேர்ச்சி அறிக்கைத் தரத்தைத் தீர்மானித்தல் ஆதாரங்களுக்கான ஆசிரியரின் விளக்கத்தை உள்ளடக்குகின்றது, அத்துடன் அது சமீபத்திய ஆதாரங்களை சிறப்பாகக் கருத்தில் கொண்டு மாணவரின் மிகவும் நிலையான நிலை அடைவைப் பிரதிபலிக்க வேண்டும். முன்னேற்றம் பற்றி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்குத் தொடர்புப்பரிமாற்றம் செய்வதற்காக தேர்ச்சி அறிக்கைத் தரங்கள் அல்லது மதிப்பெண்களின் அடிப்படையிலான இந்த மதிப்பீடுகள் கொடுக்கப்படுகின்றன.

### *இறுதி மதிப்பீடுகள்*

பீல் கல்விச்சபையில் பிரசுரிக்கப்பட்டுள்ள நாள்காட்டிக்கு ஏற்ப இறுதி மதிப்பீடுகள் நிகழ்கின்றன. இறுதி மதிப்பீடுகளை ஒவ்வொரு பாடசாலையும் எப்படிச் செய்கின்றன என்பது பற்றிய தகவல்கள் குடும்பத்தவர்களுக்கு செப்ரெம்பரில் விநியோகிக்கப்படும். மாணவர்களின் தரத்தின் இறுதி 30 சதவீதம் ஒவ்வொரு அரை இறுதிஆண்டின்(semester) கடைசிச் சில வாரங்களில் நிகழும் இறுதி மதிப்பீட்டுக் காலத்தின் போது தீர்மானிக்கப்படுகிறது. இந்தக் காலங்களின் போது, அரை இறுதிஆண்டு முழுவதும் அவர்கள் பெற்றுக்கொண்ட திறன்கள் மற்றும் அறிவை நிரூபிக்கும் விடயங்களைப் பூர்த்திசெய்யும்படி மாணவர்கள் கேட்கப்படுவார்கள். ஆசிரியர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ், இந்தக் கற்றல் வாய்ப்புகள் நிகழும், இந்த முக்கியமான கால கட்டத்தின் போது, மாணவர்கள் சமூகமளிப்பது அவசியமாகும்.

### *ஓய்வு நேரங்கள்(Spares)/கற்றல் நேரங்கள்(study periods)*

மாணவர்கள் 9ம் 10ம் வகுப்புக்களில் இருக்கும் போது, நாள் முழுவதும் அவர்களுக்கு கற்றல் நேரங்கள் (சிலவேளைகளில் ‘ஓய்வுநேரங்கள்’ எனப்படுகின்றன) இருக்க மாட்டாது. சிரேஷ்ட தரங்களுக்கு மாணவர்கள் செல்லும்போது, மற்றும் அவர்களின் கற்றல் வேகம் மாறும் போது, அவர்கள் ஒரு பாட நேரத்தை, கற்றலுக்கான நேரமாக ஒதுக்க முடியும். இதைச் செய்வதற்கு மாணவர்கள் தெரிந்தெடுத்தால், வீட்டிலோ அல்லது பாடசாலையிலோ, அவர்களுடைய வேலைகளை நிர்வகிப்பதுடன், கல்விசாராத அல்லது வேறு பொறுப்புக்களில் அவர்களுடைய நேரத்தைப் புத்திசாலித்தனமாக அவர்கள் பயன்படுத்த வேண்டும்.

### *அறிக்கையிடல்*

மாணவர்களின் கற்றல் பற்றி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடனான தொடர்பாடல் செய்முறையாக  அறிக்கையிடல் உள்ளது. தெளிவான குறிப்பிட்ட, அர்த்தமுள்ள, விளக்கமான பின்னூட்டலை  மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் வழங்கும் மற்றும் மேம்பட்ட கற்றலுக்கும் அடைவுக்கும் சரியான நேரத்தில் ஆதரவு கொடுக்கும், தொடர்ச்சியானதொரு  தொடர்பாடலின் ஒரு பகுதியாக தேர்ச்சி அறிக்கைகள் உள்ளன. ஒவ்வொரு அரை இறுதி ஆண்டினதும் மத்தியில் ஒரு முறை இடைக்காலத் தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. இறுதித் தேர்ச்சி அறிக்கைகள் இரண்டு தவணைகளினதும் இறுதியில் வழங்கப்படுகின்றன - பெப்ரவரி மற்றும் ஜூன் மாதத்தில்

## EQAO

கல்வித் தரம் மற்றும் பொறுப்புக்கான அலுவலகம் (EQAO), ஒன்ராறியோ அரசினால் நிதியளிக்கப்படும் ஒரு சுயாதீனமான மாகாண நிறுவனம் ஆகும். ஒவ்வொரு மாணவரினதும் கல்வியின் பிரதான திருப்பங்களில் மாகாணரீதியான பரீட்சைகளை நடத்துவதும், அந்தப் பெறுபேறுகளை கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பதும் EQAOன் ஆணையாக உள்ளது. ஒன்ராறியோ பாடத்திட்டத்தின் எதிர்பார்ப்புகளுடன் தொடர்பாக வாசித்தல், எழுதல் மற்றும் கணிதத்தில் மாணவர்களின் அடைவுகளை EQAO அளவிடுகிறது

EQAO மாணவர்களின் பாடசாலை வாழ்க்கை முழுவதும் அவர்களை மதிப்பிடுகிறது:

- 3ம் வகுப்பில் வாசிப்பு, எழுத்து மற்றும் கணித மதிப்பீடு
- 6ம் வகுப்பில் வாசிப்பு, எழுத்து மற்றும் கணித மதிப்பீடு
- 9ம் வகுப்பில் கணித மதிப்பீடு — 9ம் வகுப்புக் கல்வித்தர அல்லது பிரயோக கணிதத்தில் ஒரு சித்தியை(credit) நோக்கித் தொழிற்படும் அனைத்து மாணவர்களும், பங்கேற்க வேண்டும்
- 10ம் வகுப்பில் ஒன்ராரியோ இரண்டாம் நிலை எழுத்தறிவுப் பரீட்சை (OSSLT) - ஒன்ராறியோ இரண்டாம் நிலைப் பாடசாலை டிப்ளோமாவைப் பெற்றுக்கொள்வதற்கு, இந்தப் பரீட்சையை வெற்றிகரமாகப் பூரணப்படுத்த வேண்டியது ஒரு நிபந்தனையாகும்.

பரீட்சைகளை எழுதும் ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட தேர்ச்சி அறிக்கை ஒன்றை EQAO விநியோகிக்கிறது, அத்துடன் பாடசாலை, கல்விச் சபை மற்றும் மாகாணப் பெறுபேறுகளை அதன் வலைத்தளத்தில் பதிவிடுகின்றது. பாடசாலைகள் மற்றும் கல்விச் சபைகள் கூட தங்களுடைய சொந்த EQAO தரவு அறிக்கைகளைச் உருவாக்கி அவர்களின் பெற்றோர்கள் மற்றும் சமூகத்திலுள்ள ஏனையோருக்கு விநியோகிக்கின்றன. மேலும் அறிவதற்கு : www.peelschools.org/parents/eqao.

### *வீட்டு வேலை*

பாடசாலை திட்டங்களில் வீட்டு வேலையைச் சேர்ப்பதை, பீல் கல்விச்சபை ஆதரிப்பதுடன் தெளிவாக மற்றும் திறம்பட வீட்டு வேலையுடன் தொடர்பான கற்றல் எதிர்பார்ப்புகள் பற்றித் தொடர்புப்பரிமாற்றம் செய்வதற்காக கல்வியாளர்களின் தேவையையும் அங்கீகரிக்கிறது

இந்த எதிர்பார்ப்புகள், பாடசாலைக்கு வெளியேயுள்ள மாணவர் வாழ்க்கையுடன் சமப்படுத்தப்பட வேண்டும் என்பதை பீல் கல்விச்சபை அங்கீகரிக்கிறது.
இதன் விளைவாக, அது பாடசாலை நாள்காட்டிகளில் கோடிட்டு காட்டப்பட்டுள்ள, அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள புனித நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் வீட்டு வேலை கொடுக்க முடியாது எனப் பரிந்துரைக்கப்படுகிறது.

வீட்டுவேலைக் கொள்கை பாடசாலையில் அல்லது www.peelschools.orgல் கிடைக்கின்றது.
-- தேடும் பெட்டியில் *கொள்கை #70* ஐத் தேடுங்கள்

***பீல் சபை BYODக்கு ஆதரவளிக்கின்றது.***
இன்றைய மாணவர்கள் ஏற்கனவே தொழில்நுட்பத் தலைவர்களாக உள்ளார்கள்.
இதை அவர்களின் கற்றல் அனுபவங்களில் நாங்கள் பிரதிபலித்தால், அது மாணவர்களின் மேம்பட்ட வெற்றிக்கு வழிவகுக்கும் என ஆய்வு எங்களுக்குச் சொல்கின்றது.
இதனால்தான், 21 ஆம் நூற்றாண்டின் கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான எங்களுடைய கல்விச்சபையின் பார்வையும் உங்களுடைய சொந்தச் சாதனத்தைக் கொண்டு வாருங்கள் (BYOD) என்ற எங்களுடைய அணுகுமுறையும் பரபரப்பானதாக இருக்கின்றது.

பீல் மாணவர்களின் அதிகரித்த தொழில்நுட்பப் பாவனை, இன்றும் வருங்காலத்திலும் அவர்கள் வெற்றிகரமானவர்களாக இருக்க உதவுகின்றது என்பதைப் பற்றி மேலும் அறியுங்கள்: www.peelschools.org/byod.

## மாணவர் சேவைகள்

### Making My Way (என்னுடைய வழியை உருவாக்கல்)

ஒருவரின் வாழ்கைப் பாதையைத் தெரிவு செய்ய, நேரம் மற்றும் திட்டமிடல் தேவைப்படுகிறது. அது, மேலும் கல்வி மற்றும்/அல்லது பயிற்சியில் ஈடுபடுவதை உள்ளடக்கியதாக இருந்தால் என்ன, தொழிற்துறை பயிற்சியில் பங்கு பெறுவதாக இருந்தால் என்ன, அல்லது நேரடியாகத் தொழில்துறையில் நுழைவதாக இருந்தால் என்ன, மாணவர்கள், தங்களின் ஆர்வங்கள், திறன்கள் மற்றும் திறமைகளை ஆராய்வதற்கு உதவ பாடசாலைகளில் நிறைந்த ஆதாரவளங்களும் வாய்ப்புக்களும் இருக்கின்றன.

உயர்தரப் பாடசாலையின் பின்னர் தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும், உங்களுடைய தெரிவுகளை ஆராயவும் உங்களுக்கு உதவும் இணைய ஆதாரவளங்கள் மற்றும் கருவிகளை வழங்குகிறது. கருத்தில் கொள்வதற்கு, பின்வரும் ஐந்து முக்கியமான வழித்தடங்கள் உள்ளன:

- தொழில்முறைப் பயிற்சி
- கல்லூரி
- சமூகத்தில் வாழல்
- பல்கலைக்கழகம்
- வேலையிடம்

எதிர்காலத்தில் வேலைச் சந்தையில் வேண்டிய பெறுமதிமிக்க திறன்கள் மற்றும் அனுபவங்களை ஒவ்வொரு வழித்தடமும் வழங்குகிறது. அவர்களும் அவர்களை சுற்றியுள்ள உலகமும் மாறும் போது அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் அவர்களுடைய வழித்தடத்துக்கான திட்டத்தை செயல்படுத்தும், பரிசீலிக்கும், மற்றும் இசைவாக்கப்படும் அவர்களின் திறன்களில் மாணவர்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும்,

தொழில் / வாழ்க்கை திட்டமிடலுக்கு (வெற்றிக்கு வழித்தடங்கள் உருவாக்குதல்: ஒன்ராறியோ பாடசாலைகளுக்கான கல்வி மற்றும் தொழில்/வாழ்க்கைத் திட்டமிடலுக்கான ஒரு திட்டம், ஒன்ராறியோ கல்வி அமைச்சு, 2013) நான்கு முக்கிய கேள்விகளைக் கருத்தில் கொள்ளும்படி அவர்களின் உயர்தரப் பாடசாலைப் பயணம் முழுவதும் மாணவர்கள் கேட்கப்படுவார்கள்:

- நான் யார்?
- என்னுடைய வாய்ப்புகள் என்ன?
- நான் யாராக வருவதற்கு விரும்புகின்றேன்?
- என் இலக்குகளை அடைவதற்கான எனது திட்டம் யாது?

*myBlueprint*

www.myBlueprint.ca/Peel என்பது, பீல் கல்விச்சபையிலுள்ள 7ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரையான மாணவர்கள் அனைவரும் பயன்படுத்தப்படும் ஒரு இணையத் திட்டமிடல் கருவி ஆகும். மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இந்தத் திட்டமிடல் கருவியை வீட்டிலும் பயன்படுத்தலாம் அத்துடன் இது பின்வரும் அம்சங்களை உள்ளடக்குகின்றது:

- உயர்தரப் பாடசாலை கற்கை நெறித் தெரிவு
- குறிக்கோள் உருவாக்கல்
- கற்றல் பாணி விவரப்பட்டியல்
- நிதித் திட்டமிடல்
- ஆர்வங்களின் விவரப்பட்டியல்
- தொழில் திட்டமிடல்
- தற்கூற்று(resume) மற்றும் முகப்புக் கடிதம்(cover letter) உருவாக்கம்
- இரண்டாம் நிலைக்கு பின்பான தெரிவுகள் மற்றும் திட்டங்கள் ஒப்பிடல்

***கற்கை நெறித் தெரிவு***

9ம் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு நான்கு வகையான கற்கை வகைகள் உள்ளன:

- பல்கலைக்கழகத்துக்கான கற்கை நெறி படிப்புகள் கருத்தியல்ரீதியான சுருக்கக் கூறுகளில் கவனம் செலுத்தும். இந்தக் கற்கை நெறிகள், வேகமான கற்றல் சூழலை விரும்பும் சுயாதீனமாகக் கற்கும் மாணவர்களுக்குச் சிறப்பாகப் பொருந்தும்.
- பிரயோக கற்கை நெறிகள், நடைமுறைப் பயன்பாடுகள் மற்றும் உறுதியான உதாரணங்களில் கவனம் செலுத்துகின்றன. மாணவர்களுக்கு ஆதரவளிப்பதற்காக பாடங்கள் ஆசிரியர்களால் மாதிரிகளுடன் விளங்கப்படுத்தப்படுகின்றன(scaffolded).
- உள்நாட்டில் உருவாக்கப்பட்ட கற்கை நெறிகள், அதிகளவில் நெகிழ்வு தன்மை மற்றும் ஆதரவு தேவைப்படும் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளன.
- கலைகள், ஆரோக்கியம் மற்றும் உடற்கல்வியியல் மற்றும் வர்த்தகப் படிப்புகள் போன்ற விருப்பத்துக்குரிய படிப்புகள் உள்ளதாக திறந்த கற்கை நெறிகள் உள்ளன,

கற்கை நெறியைத் தெரிவு செய்யும்போது, முந்திய ஆண்டு ஆசிரியர்களின் சிபாரிசுகளை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். சிறந்த அவர்களின் கற்றல் பலம் மற்றும் தேவைகளுக்கேற்ப மாணவர்கள் வேறுபட்ட வகைகளைத் தேர்ந்தெடுக்க முடியும்; உதாரணத்துக்கு பல்கலைக்கழகத்துக்கான மற்றும் பிரயோகக் கற்கை நெறிகளின் கலப்பு.

கற்கை நெறித் தேர்வு ஒரு தொடர்ச்சியானதொரு செய்முறையாகும் அத்துடன் அது தனிப்பட்ட மாணவர் ஒருவரின் ஆர்வங்கள், திறமைகள் மற்றும் இலக்குகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். இந்தச் செய்முறைக்கு உதவுவதற்காக, முன்மொழியப்பட்ட வகுப்புகள் பற்றி அவர்களுடைய ஆசிரியர்களுடன் பேசுவதற்கு, இணையத்தில் கற்கை நெறி பற்றிய விபரத்தை வாசிப்பதற்கு, அவர்களுடைய ஆலோசகர்களுடனும் பெற்றோருடனும் கதைப்பதற்கு, மற்றும் ஏற்கனவே இந்த வகுப்புகளை எடுத்த மாணவர்களுடனும் பேசுவதற்கு மாணவர்கள் மிகவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அவர்களுடைய கற்கை நெறியை மாற்றுவதற்கு, மாணவர்கள் விரும்பினால், முடிந்தளவு விரைவாக அவர்களுடைய வழிகாட்டல் ஆலோசகரை அவர்கள் சந்திக்க வேண்டும்.கேட்கப்பட்ட மாற்றங்கள் சாத்தியமில்லாமல் போகலாம் என்பதைத் தயவுசெய்து நினைவில் கொள்ளவும்.

### *Chart Your Course – பொதுக் கற்கை நெறி நாள்காட்டி*

***Chart Your Course, பீல் கல்விச்சபையின் பொதுவானதொரு நாள்காட்டியாகும். பீல் இரண்டாம்நிலை மாணவர்களுக்கான கற்கை நெறிகளை இந்த முக்கியமான ஆவணம் கோடிட்டுக் காட்டுகின்றது. இந்த வழிகாட்டி இணையத்தில் கிடைக்கின்றது: www.peelschools.org/students/commoncoursecalendar.***

### *டிப்ளோமாவுக்கான தேவைகள்*

ஒன்ராறியோ இரண்டாம்நிலைப் பாடசாலை டிப்ளோமா ஒன்றைப் பெறுவதற்கு (OSSD), மாணவர் ஒருவருக்குப் பின்வருவன இருப்பது அவசியமானது:

- 18 கட்டாய சித்திகளும் (credits) 12 தெரிவுக்குரிய சித்திகளும் அடங்கிய 30 சித்திகள்
- 40 மணி நேர சமூகத்துடன் தொடர்பான செயற்பாடுகள் பூர்த்தி

- ஒன்ராறியோ இரண்டாம்நிலை பாடசாலை எழுத்தறிவுப் பரீட்சையை (OSSLT) அல்லது ஒன்ராறியோ இரண்டாம்நிலை பாடசாலை எழுத்தறிவுக் கற்கை நெறியை (OSSLC) வெற்றிகரமாக பூரணப்படுத்தல்

***சமூக சேவை – 40 மணித்தியாலம்***

மாணவர்கள் தேர்ச்சி பெறுவதற்கு, சமூகத்துடன் தொடர்பான செயல்பாடுகளை, அவர்கள் 40 மணி நேரம் செய்திருக்க வேண்டும். இதனை 9ம் வகுப்புக்கு நுழைவதற்கு முன்பான கோடையில் சேமிக்க ஆரம்பிக்கலாம். தொண்டர் வேலையைக் கண்டுபிடிப்பதற்கும் 40 மணி நேரம் தானாகவே செய்து முடிப்பதற்கும் மாணவர்களே பொறுப்பானவர்கள். மாணவர்களின் தன்னார்வ வேலைவாய்ப்பைக் கண்டுபிடிப்பதிலோ அல்லது அவர்கள் தங்களுடைய தன்னார்வத்தொண்டர் வேலையை முடிக்கும் போது மாணவர்களைக் கண்காணிப்பதிலோ பாடசாலை நேரடியாகச் சம்பந்தப்பட மாட்டாது.

தன்னார்வத் தொண்டை மாணவர் ஆரம்பிப்பதற்கு முன்பாக, சாத்தியமான பணி வாய்ப்புகளைக் கண்டுபிடிப்பதற்கு பெற்றோரே பொறுப்பாக இருப்பார்கள். தகுதியான மற்றும் தகுதியற்ற செயல்பாடுகள் கொண்ட ஒரு பட்டியல் உள்ளடங்கலான மேலதிகத் தகவல்களை www.peelschools.org/students/40hoursல் பார்க்கலாம்.

**வழித்தடத் திட்டங்கள்**

*பீல்* கல்விச்சபையின் வழித்தடத் திட்டங்கள், பல்வேறு மற்றும் ஈடுபடுத்தும் கற்றலுக்கான வாய்ப்புகள், வகுப்பறையில் உள்ளேயும் வெளியேயுமான கற்கை நெறிகள் மற்றும் திட்டங்களை வழங்குகின்றன. இந்தத் திட்டங்கள் 11ம் மற்றும் 12ம் வகுப்பில் தொடங்கும் மாணவர்களுக்குக் கிடைக்கின்றன.

***கூட்டுறவுக்கல்வி***

கூட்டுறவுக் கல்வி, கற்கை நெறிப் பாடத்திட்டத்தை வேலையுடன் ஒன்றிணைப்பதன் மூலம் மாணவர்கள் சித்திகளைப் பெற வழிவகுக்கின்றது. அரை இறுதி ஆண்டு ஒன்றுக்கு நான்கு சித்திப்படி ஒன்ராறியோ இரண்டாம்நிலைப் பாடசாலை டிப்ளோமாவுக்கான (OSSD) 12 கூட்டுறவுச் சித்திகளை மாணவர்கள் பெறக்கூடியதாக கற்கை நெறிப் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வேலையிட மேற்பார்வையாளர் மற்றும் கூட்டுறவு ஆசிரியர்கள், மாணவர்களைக் கண்காணிப்பதுடன் அவர்களுடைய கற்றலுக்கு ஆதரவளிக்கின்றனர்.

மேலதிக தகவல்களுக்கு உங்களுடைய வழிகாட்டல் ஆலோசகரைச் சந்தியுங்கள் அல்லது பார்வையிடுங்கள் www.peelschools.org/CoopEducation.

### *இரட்டைச் சித்தித் திட்டங்கள் (Dual Credit Programs)*

ஒரே நேரத்தில், கல்லூரி மற்றும் கட்டாயமற்ற இரண்டாம் நிலைச் சித்திகளை மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் தனித்துவமான வாய்ப்பை இரட்டைச் சித்தித் திட்டங்கள் வழங்குகின்றன. கல்லூரிச் சித்திகள்(College credits) உயர்தரப் பாடசாலைக்குப் பின்னரான கல்லூரித் திட்டத்துக்குப் பிரயோகிக்கப்படலாம். பின்வரும் கல்லூரிகளில் பல்வேறுபட்ட கற்கை நெறிகளைத் தெரிவுசெய்யலாம்: Centennial, George Brown, Humber, Seneca & Sheridan. மேலதிக தகவல்களுக்கு உங்களுடைய வழிகாட்டல் ஆலோசகரைச் சந்தியுங்கள் அல்லது பார்வையிடுங்கள் www.peelschools.org/DualCredit.

### *ஒன்ராறியோ இளைஞர் தொழில்பயிற்சித் திட்டம் Ontario Youth Apprenticeship Program (OYAP)*

மாணவர்கள், அவர்களுடைய உயர்தரப் பாடசாலை டிப்ளோமாவுக்கான சித்திகளைப் பெறுவதுடன் சாத்தியமான தொழிலை ஆராயும் அதே வேளையில், திறன்களுள்ள வர்த்தகச் சூழலில், யதார்த்தமான, செயல்ரீதியான பயிற்சியை OYAP திட்டம், அவர்களுக்கு வழங்குகின்றது. வர்த்தகத்தில் தொழில் ஒன்றைத் தேடும் மாணவர்கள், பதிவுசெய்யப்பட்ட தொழில்முறைப் பயிற்சியாளராக வருவதையும் வர்த்தகத்துக்கான ஒன்ராறியோ கல்லூரியின் (Ontario College of Trades) அங்கத்தவராவதையும் தெரிவு செய்யலாம். மேலதிக தகவல்களுக்கு உங்களுடைய வழிகாட்டல் ஆலோசகரைச் சந்தியுங்கள் அல்லது பார்வையிடுங்கள் www.peelschools.org/OYAP.

### *Specialist High Skills Major (SHSM)*

SHSM திட்டத்தில், மாணவர்கள் ஆர்வமுள்ள தொழிலில் கவனம் செலுத்துகின்றனர். இந்தப் பிரிவுக்கான விசேடத் திட்டங்கள் ஒவ்வொரு உயர்தரப் பாடசாலைக்கும் தனித்துவமானவை, SHSM seal டிப்ளோமாவுக்கான பிரிவுகளினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுக்கின்றன. மேலதிக தகவல்களுக்கு உங்களுடைய வழிகாட்டல் ஆலோசகரைச் சந்தியுங்கள் அல்லது பார்வையிடுங்கள் www.peelschools.org/SHSM.

*பிராந்தியத் திட்டங்கள்*

கற்பவர்கள் அனைவரினதும் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு பீல் கல்விச்சபை உறுதிபூண்டுள்ளது. மாணவர்களிடையேயுள்ள வேறுபாடுகளைக் கருத்தில் கொள்வதுடன் மட்டுமன்றி, வழமையான வகுப்பறைக்கு வெளியே விரிவடையும் புதுமையான திட்டங்களையும் வழங்கல் என்பது இதன் பொருளாகும். பிராந்தியக் கற்றல் தெரிவுகள் மற்றும் அவை வழங்கப்படும் இடங்கள் பற்றிய தகவல்கள் பீல் கல்விச்சபை வலைத்தளத்தில் கிடைக்கின்றன: www.peelschools.org/RegionalPrograms.

*கோடை மற்றும் இரவுப் பாடசாலை*

கோடைகால மற்றும் இரவுப் பாடசாலைச் சித்திகள் பீல் கல்விச்சபையின் தொடரும் கல்வித் (Continuing Education) திணைக்களத்தால் வழங்கப்படுகின்றன. பீல் மற்றும் பீல் அற்ற மாணவர்களுக்கு வகுப்பிலும் இணையத்திலும் சித்திகள் வழங்கப்படுகின்றன.

பீல் கல்விச்சபையின் வலைத்தளத்தில் www.peelschools.org/summerschool ல், *Continuing Education – Credit Summer School* பிரிவைப் பார்ப்பதன் மூலம் கோடைகாலப் பாடசாலை வகுப்புகள் பற்றி மேலும் அறியுங்கள்.

பீல் கல்விச்சபையின் வலைத்தளத்தில் www.peelschools.org/nightschool ல், *Continuing Education – Credit Night School* பிரிவைப் பார்ப்பதன் மூலம் இரவுப் பாடசாலையில் எப்படிப் பதிவுசெய்வது என்பது பற்றி மேலும் அறியுங்கள். இரவுப் பாடசாலைக்கான பதிவுகள் ஒவ்வொரு வருடமும் செப்ரெம்பரிலும் ஜனவரி/பெப்ரவரியிலும் நிகழ்கின்றன.

*இணையத்தில் கற்றல் (eLearning)*

வேறுபட்ட அட்டவணைகள் மற்றும் மாணவர்களின் ஆர்வங்கள் மற்றும் பலங்களுக்கு பொருந்தக்கூடிய ஒரு தெரிவாக இணையக் கற்றல் உள்ளது. வழமையான நேரசூசிகைகளுக்கூடாக ஒரு கற்கை நெறியை மாணவர்கள் அணுக முடியாதுள்ளபோது, இணையக் கற்றல் ஒரு தெரிவாக அமையலாம். இணையக் கற்றல் பற்றிய மேலதிக தகவல்கள் www.peelschools.org/parents/programs/onlineல் கிடைக்கின்றன.

## ஆதாரவளங்கள்

*www.makingmyway.ca*

*www.myBlueprint.ca/Peel*

*www.peelschools.org/parents/helpyourchild*

*www.edu.gov.on.ca/eng/document/policy/cps/creatingpathwayssuccess.pdf*

## உங்களுடைய கேள்விகளுக்கான பதில்களைப் பெறல்

- உங்களுடைய மகன் அல்லது மகளின் கல்வி பற்றி உங்களுக்கு குறிப்பிடத்தக்க கேள்விகள் அல்லது கரிசனைகள் இருந்தால், முதலில் நீங்கள் கதைக்க வேண்டியவர் உங்களுடைய பதின்மவயதினரின் ஆசிரியர் ஆவார்.
- மேலதிக உதவி உங்களுக்குத் தேவைப்பட்டால் அல்லது உங்களிடம் பல பொதுவான கேள்விகள் இருந்தால், உதவிசெய்வதற்கு உங்களுடைய பாடசாலை அதிபர் இருக்கின்றார்.
- உங்களுடைய ஆர்வங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவும் உங்களுடைய ஆலோசனைகள் அல்லது பிரச்சினைகளைக் கேட்பதற்கும் அவற்றைக் கலந்துரையாடவும் எப்போதும் தயாராக இருப்பதற்காக, உங்களுடைய உள்ளூர் பாடசாலை தர்மகர்த்தா தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். உங்களுடைய தர்மகர்த்தாவின் பெயர் உங்களுக்குத் தெரியாவிடில், www.peelschools.orgல் அல்லது உங்களுடைய பாடசாலை வலைத்தளத்தின் தர்மகர்த்தாப் பிரிவைப் (*Trustee* section) ஐ பார்வையிடுங்கள்.
- பாடவிதானம் பற்றி உங்களுக்குப் பொதுவான கேள்விகள் இருந்தால், கல்விச் சபையின் பாடவிதானம் & அறிவுறுத்தல் ஆதரவுச் சேவைகள் (Curriculum & Instruction Support Services) பிரிவை அழையுங்கள் : 905-890-1010 (அல்லது 1-800-668-1146) ext. 2559. .
- பாடவிதானம் சம்பந்தமான அனைத்தும் உங்களுடைய பதின்மவயதினரின் பாடசாலையில் கிடைக்கும். பாடவிதான ஆவணங்கள் கல்வித் திணைக்களத்தின் வலைத்தளத்திலும் கிடைக்கும் : www.edu.gov.on.ca/eng/curriculum.

**இந்த வழிகாட்டி பின்வருவோரின் நிதி உதவியால் சாத்தியமாகியுள்ளது:**

## Making My Way (என்னுடைய வழியை உருவாக்கல்)

முன்னெடுப்புக்கான திட்டங்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை ஆராய்வதற்குப் பார்வையிடுங்கள்: www.makingmyway.ca

## பெற்றோர் சம்பந்தப்படும் குழு (Parent Involvement Committee)

பெற்றோரின் ஈடுபாட்டுக்கு நீங்கள் எப்படி ஆதரவு வழங்கலாம் மற்றும் பெற்றோரின் ஈடுபாட்டை ஊக்கப்படுத்தலாம் என அறிவதற்குப் பார்வையிடுங்கள்: www.peelschools.org

## பீல் பிராந்திய கல்விச் சபை

ஒவ்வொரு மாணவரினதும், வெற்றி, தன்னம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பை நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

www.peelschools.org

www.facebook.com/peelschools

www.twitter.com/peelschools